ஏப்ரல்–ஜூன் 2025

கணித்தமிழ்

மின்னிதழ் : 3

காலாண்டிதழ்



முதன்மை ஆசிரியர்
ரெ. கோமகன்

இணை இயக்குநர்
தமிழ் இணையக் கல்விக்கழகம்

ஆசிரியர் குழு

அ. அருண்மொழி
துணை இயக்குநர்

செல்வ புவியரசன்
உதவி இயக்குநர்

முனைவர் க. பாக்கியராஜ்
திட்ட மேலாளர்

உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்கள்
ந. செல்லப்பா
த. ராஜன்

வடிவமைப்பு
அப்துல் ரஹ்மான்
திட்ட ஒருங்கிணைப்பாளர்

தொடர்புக்கு
தமிழ் இணையக் கல்விக்கழகம்
காந்தி மண்டபச் சாலை
கோட்டூர்புரம்
சென்னை-600 025.
தொலைபேசி: 91-44-2220 9400
மின் அஞ்சல்: tva@tn.gov.in

உள்ளடக்கம்

கல்வித் திட்டங்கள்

05

கற்றலுக்குத் துணைநிற்கும் கருவிகள்

09

கலைப் பண்பாட்டு மற்றும் பட்டமளிப்பு திருவிழா – முனைவர் ஸ்ரீ ரோகினி

நூலகம்

15



டிஜிட்டல் உலகில் தமிழ் வாசிப்பு – பா. ராகவன்

20

தமிழ் இணையக் கல்விக்கழகமும் நவீன தமிழாய்வின் மறுமலர்ச்சியும் – பொ.வேல்சாமி

ஆய்வு மற்றும் உருவாக்கம்

24

தமிழ் மொழி வளர்ச்சியில் இணையத்தின் பங்கு – மு. அனந்தகிருஷ்ணன்

28



தமிழ் மின் நிகண்டு– த.இ.க மென்பொருள்

தமிழ்மொழி, உலகப் பண்பாட்டின் தொட்டில்; நாகரிகங்களின் ஊற்று என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது. இத்தகைய பழமை வாய்ந்த தமிழ்மொழியைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் பல நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் இணைந்து தொடர்பு மையங்கள் வாயிலாகப் பரப்பிவருகிறது. இதன் முதன்மைச் செயல்பாடாக உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும், தமிழ் படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் சான்றிதழ்க் கல்வியை இணையம் வழியாக வழங்குகிறது.

சங்க இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை மின்னுருவாக்கம் செய்யப்பட்டு மின் நூலகத்தில் பதிவேற்றப்பெற்றுள்ளது. மின் நூலகம் கோடிக்கணக்கான பயனாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தகவலாற்றுப்படை என்னும் இணையதளத்தில் தமிழர் நாகரிகம் மற்றும் பண்பாடு தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ் சார்ந்த மென்பொருள்கள் உருவாக்கப்பட்டு அனைவரும் பயன்படுத்தும் வகையில் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன.

கற்றலுக்குத் துணைநிற்கும் கருவிகள்

உலகு தழுவி வாழும் தமிழ் மக்களும் தமிழில் ஈடுபாடு கொண்டுள்ள பிற மொழியினரும் தமிழ் மொழி, தமிழர் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவை பற்றி அறிந்துகொள்ள ஏதுவாகக் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பாடத்திட்டங்களை வகுத்து இணையம் வழியாகப் பாடநூல்களைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் வழங்கி வருகிறது. தற்போது பாடநெறிகள் மேம்படுத்தப்பட்டுக் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய மொழித்திறன்களின் அடிப்படையில் புதிய தமிழ்ப் பாடநூல்கள் அகரம், இகரம், உகரம், ழகரம், சிகரம் ஆகிய ஐந்து நிலைகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும், இப்பாடநெறிகளை எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் ஒலிபெயர்ப்புப் புத்தகம், மொழிபெயர்ப்புப் புத்தகம், ஒலிப்புத்தகம், ஒலிக்குறிப்புப் புத்தகம், காணொலிப் புத்தகம், அசைவூட்டுக் காணொலிகள், மின்னட்டைகள், பல்லூடகப் பயிற்சி நூல்கள் ஆகிய கற்றல் துணைக்கருவிகளும் உருவாக்கப்பட்டுள்ளன.





ஒலிபெயர்ப்புப் புத்தகம்
(Transliteration Book)

அடிப்படைத் தமிழ்மொழியை ஆங்கில மொழியறிவு பெற்றவர்கள் எளிதில் கற்பதற்கேற்றவாறு அம்மொழியில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்திய மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, குஜராத்தி, மராத்தி, பெங்காலி, ஒரியா, அசாமி, பஞ்சாபி, உருது ஆகிய 11 மொழிகளில் ஒலிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழ்மொழியை மேற்கண்ட மொழியினர் தங்களது மொழியின் வாயிலாகவே எளிதாக உச்சரித்துக் கற்றுக்கொள்ளலாம்.

மொழிபெயர்ப்புப் புத்தகம்
(Translation Book)

வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் மாணவர்கள் தங்களது தாய்மொழி வழியாகத் தமிழைக் கற்கும் வண்ணம் இந்திய மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, குஜராத்தி, மராத்தி, பெங்காலி, ஒரியா, அசாமி, பஞ்சாபி, உருது ஆகிய 11 மொழிகளிலும் வெளிநாட்டு மொழிகளான ஆங்கிலம், சீனம், கொரியன், ஜெர்மன், பிரெஞ்சு, போர்த்துகீசு, ரஷ்யன், ஸ்பானீஷ், இத்தாலியன், அரபு, ஜாப்பானிஷ், நேபாளி, தாய்லாந்து ஆகிய 13 மொழிகளிலுமாக மொத்தம் 24 மொழிகளில் அடிப்படை நிலை அகரம் புத்தகம் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது.

இப்பாடப் புத்தகங்கள் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இப்பாடப் புத்தகங்களைக் கட்டணமின்றிப் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒலிப்புத்தகங்கள் (Audio Books)

இன்றைய சூழலில் இளம் தலைமுறையினர் நவீனத் தொழில்நுட்பத்தின் உதவியுடன் பாடங்களை எளிதில் கற்பதையே விரும்புகின்றனர். இத்தலைமுறையினருக்காகத் தமிழ்மொழிப் பாடங்கள் அவர்களின் தேவைக்கேற்ப ஒலிவடிவத்தில் கேட்டு கற்பதற்காக ஒலிப்புத்தகமாக உருவாக்கப்பட்டுள்ளன. இந்த ஒலிப்புத்தகங்களை மாணவர்கள் எந்த இடத்திலும் எந்தச் சூழலிலும் பயன்படுத்தி இப்பாடங்களை ஒலி உச்சரிப்புடன் கேட்டுப் பயிற்சிபெற்றுத் தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ளலாம்.

காணொலிப் புத்தகங்கள் (Video Books)

கற்றல் திறன்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இப்பாடநெறிகளில் உள்ள இலக்கணப் பகுதிகளை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்வதற்காகத் தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு உரிய விளக்கங்களுடன் காணொலிப் புத்தகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்காணொலிப் புத்தகங்கள் மூலம் மாணவர்கள் ஆசிரியரிடம் நேரடியாகக் கற்கும் உணர்வைப் பெற இயலும்.

அசைவூட்டுக் காணொலிகள் (Animation Videos)

தமிழ்மொழியைக் கற்க விரும்பும் குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம் பாடப்பகுதிகளில் இடம்பெற்றுள்ள பாடல்களை இசையுடனும் உரையாடல் பகுதிகளைக் காட்சிகள் வாயிலாக விளக்கும் விதமாகவும் அசைவூட்டுக் காணொலிகளும் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வசைவூட்டுக் காணொலிகள் மூலம் குழந்தைகள் தமிழ்மொழியை ஆர்வத்துடன் கற்றுக்கொள்ளலாம்.

மின்னட்டைகள் (Flash Cards)

மாணவர்கள் தமிழ் மொழிக்கான சொல்லையும், அதன் பொருளையும் நினைவு கொள்ளும் வகையில் மின்னட்டைகள் (Flash Cards) உருவாக்கப்பட்டுள்ளன. இம்மின்னட்டைகள் மூலம் 100க்கும் மேற்பட்ட புதிய சொற்களை மாணவர்கள் அறிந்துகொள்ளவும், அவற்றை நினைவில் வைத்துக்கொள்ளவும் இயலும்.

ஒலிக்குறிப்புப் புத்தகம் (Read Along Books)

தமிழ்மொழியைக் கற்கும் மாணவர்கள் ஒலிக்கும் சொல்லுக்கும் இடையேயான வேறுபாட்டினைக் காட்சிகள் மூலம் கண்டறிந்து, அதனை எளிதாக உச்சரிக்கவும், தமிழ் வரிவடிவத்தை அறிந்துகொள்ளவும் ஒலிக்குறிப்புப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஒலிக்குறிப்புப் புத்தகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் மாணவர்கள் தமிழ் எழுத்துகளை சரியான முறையில் உச்சரிக்கவும் பிழையின்றி ஒரு சொல்லை உச்சரிப்பதற்கான முறையையும் அறிந்துகொள்ள இயலும்.

பல்லூடகப் பயிற்சி நூல்கள்

(Multi Modal Exercise Books)

ஒரு மொழியைக் கற்க விரும்பும் மாணவர்கள் அம்மொழிச் சார்ந்த பயிற்சிகளை மீண்டும் மீண்டும் மேற்கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் தமிழ் மொழியைக் கற்கும் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான பயிற்சிகளை மேற்கொள்வதற்காக இணையம் வழியாக பல்லூடகப் பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாணவர்கள் பாடங்களில் உள்ள பயிற்சிகளைப் பயின்று தங்களது பிழைகளைத் திருத்திக் கொள்வதுடன் தங்களின் மொழித் திறன்களை மேம்படுத்திக்கொள்ளவும் இப்பல்லூடகப் பயிற்சி நூல்கள் பெரிதும் உதவியாக அமையும்.

பயிற்சி நூல்கள்

புதிய பாடநூல்களை அடிப்படையாகக் கொண்டு கற்றல் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்றவற்றை மையப்படுத்திக் கூடுதலாகச் சில பயிற்சிகளைக் கொண்டு பயிற்சி நூல்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மாணவர்கள் தங்களின் மொழிப் பயிற்சி மற்றும் திறன்களை வளர்த்துக்கொள்ள இயலும்.

உலகெங்கிலும் தமிழ்மொழியைக் கற்க விரும்புபவர்களுக்கு இத்தகைய கற்றல் - கற்பித்தல் துணைக்கருவிகள் மூலம் எளிய முறையில் தமிழ் மொழியை இணையம் வழியாக வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் அனைவரும் தமிழ்ப் பண்பாடு மற்றும் மொழித்திறனைக் கற்று அறிந்து, பயனடைவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கற்றல் கல்வி மேலாண்மை மையம், ஐக்கிய அரபு அமீரகம்
கலைப் பண்பாட்டு மற்றும் பட்டமளிப்புத் திருவிழா

முனைவர் ஸ்ரீ ரோகினி

26–4–2025, கற்றல் 12 ஆம் ஆண்டுத் தொடக்க விழா

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் தொடர்பு மையமாக 2023ஆம் ஆண்டு முதல் செயல்பட்டுவரும் ஐக்கிய அரபு அமீரகத்தின் கற்றல் கல்வி மேலாண்மை மையம் தமிழ் மொழியில் சான்றிதழ், மேற்சான்றிதழ், பட்டயம், மேற்பட்டயம், பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி ஆண்டுதோறும் மாணவர்களுக்குத் தமிழ்க் கல்வியைப் பயிற்றுவித்து வருகிறது. இக்கல்வி மையத்தின் 12ஆம் ஆண்டு தொடக்க விழா நிகழ்வுகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

அமீரகத்தில் தமிழ்மொழியின் தாலாட்டில் புகழ்மிக்க நாள்!

“யாதும் ஊரே, யாவரும் கேளிர்” என்னும் கூற்றுக்கிணங்க ஐக்கிய அரபு அமீரகத்தில் தமிழின் இலக்கியத் தரவுகளையும், தமிழ்க்கல்வி வளர்ச்சியையும் உயர்த்திக்காட்டும் தமிழ்நாடு

அரசின் தமிழ் இணையக் கல்விக்கழகம் அங்கீகரித்துள்ள தொடர்பு மையமாகக் செயல்பட்டுவரும் கற்றல் கல்வி மேலாண்மை மையத்தின் சார்பாக 26-4-2025 அன்று துபாய் ஜுமைரா பல்கலைக்கழக வளாகத்தில் கலைப் பண்பாட்டு மற்றும் பட்டமளிப்புத் திருவிழா நடைபெற்றது. இம்மையத்தின் 12 ஆம் ஆண்டு தொடக்க விழாவாக நடந்த இந்த நிகழ்ச்சியில்,

“கல்வியே வாழ்க்கையின் ஒளியிழை! என்று,

திருமதி. செல்வலதா அவர்கள் மேடையில் கல்வி உறுதிமொழியை வாசிக்க, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் உள்ளம் கனிந்த உறுதி மொழியை ஆமோதித்தனர்.

இதைத் தொடர்ந்து, "வந்தாரை வரவேற்பது நம் தமிழரின் பண்பாடு" என்று விழாவுக்கு வருகைபுரிந்த அனைவரையும் துணைத் தலைமை ஆசிரியர் திருமதி. கிருபா பிரியதர்ஷினி அவர்கள் வரவேற்றார், தலைமை ஆசிரியர் திருமதி. அபிராமி அவர்கள் 2014-2025 வரை 11 ஆண்டுகளில் 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் அனைத்துப் பாடங்களிலும் 100 சதவீதம் தேர்ச்சி பெற்று உள்ளனர், குறிப்பாக, தெலுங்கு, மலையாளம், அரபி, இந்தி மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களும் தமிழில் 100

சதவீதம் தேர்ச்சி பெற்று உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது என்று பெருமிதத்துடன் ஆண்டு அறிக்கையை வழங்கினார்.

"அறம், பொருள், இன்பம்" - திருவள்ளுவர் கூறிய சிந்தனைகளின் முக்கியத்துவத்தை உணர்த்த

ஐக்கிய அரபு அமீரகத்தின் வரலாற்றில் முதன்முறையாக 133 குழந்தைகள், பெரியவர்கள் முற்றோதல் உடன் திருவள்ளுவர் சிலை திறந்துவைக்கப்பட்டது.

"புதிய தொடக்கம் எப்போதும் ஒரு நம்பிக்கையின் வெளிச்சம்". **என்பதைப் போன்றே கற்றல் கல்வி மேலாண்மை மையத்தின் தலைவரும், நிறுவனருமான முனைவர் மு.ரா. ஸ்ரீ ரோகிணி அவர்கள் கற்றல் கல்வி மைய வளர்ச்சியின் பயணத்தையும், கற்றல் ஆய்வு கூடம், கற்றல் பதிப்பகம், கற்றல் பயிற்சி மற்றும் கூடுதல் பாடத்திட்டச் செயல்பாடுகள் எனப் புதிய விருட்சம்** "கற்றல் குழுமத்தின்" **தொடக்கத்தையும் பெருமையுடன் அறிமுகம் செய்துவைத்தார்.**

"எழுத்தின் வார்த்தைகள், இனி உலகை மாற்றும் வேர்கள்"

வரலாற்றில் முதன்முறையாக 30 இளம் மாணவர்கள் கையெழுத்துப் பிரதியாக எண்ணும் எழுத்தும் என்னும் தலைப்பில் (கதை, கவிதை, கட்டுரை) உருவாக்கிய சிறுவர் நூல் வெளியீடும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் விருந்தினர்களான பத்திரிகையாளர் ஆவுடையப்பன் மற்றும் இலங்கையின் எழுத்தாளர் அஹமத் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆகியோர் நூல்களை வெளியிட, சேலம் அஸ்தம்பட்டி நகர் மன்றத் தலைவர் உமாராணி செல்வராஜ் மற்றும் தென்கொரியப் பேராசிரியர் முனைவர் சரவணன் ஆகியோர் நூல்களைப் பெற்றுக் கொண்டனர்.

"

சிறு வயதில் விதைக்கப்பட்ட தமிழ் விதைகள், எதிர்காலத்தில் செழிக்கும் இலக்கிய மரங்களாக மாறும்.

என்பதற்கிணங்க 2024ஆம் கல்வி ஆண்டில் கல்வி நிலையை நிறைவுசெய்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பட்டம் பெற்றனர். மாணவர்களுக்குப் பதக்கங்களும், சான்றிதழ்களும் சிறந்த மாணவர்களுக்குக் கற்றலின் சுடர் விருதும் வழங்கப்பட்டன. மாணவர்களின் திறமையை வெளிப்படுத்தும் பாரம்பரிய நடனங்கள், இயல், இசை, நாடகம் ஆகிய கலைநிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டன.

விழாவில் விருந்தினர்கள் தங்களுடைய கருத்துகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டனர். திரு. ஆவுடையப்பன் அவர்களின் உரை பெற்றோர் குழந்தைகள் இடையே ஒரு உணர்வுப்பூர்வப் பாலமாக அமைந்தது.

மேலும், இவ்விழாவில் கலந்துகொள்ள அமீரகம் வருகைதந்த அனைவரையும் அமீரக நாதா அல் காதீர் மனிதவளத்துறை தோற்றுநர், பேராசிரியர் முனைவர் காதீர் ஜாதன், அமீரகக் கல்வி ஆலோசகர் முனைவர் ஜாசீம் ஒபைத் அல் சாபி ஆகியோர் பாராட்டி மலர் மாலையும், கிரீடமும் வழங்கினர்; டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்களுக்கு "முத்தமிழ் காவலர்" விருதும், மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கனிமொழி என். வி.என்.சோமு அவர்களுக்கு "தாய்த்தமிழ் நாயகி" விருதும், திருமதி. உமாராணி அவர்களுக்கு "மக்கள் சேவை நாயகி" விருதும், காப்பியக்கோ அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களுக்கு "தமிழ் அமுத சுரபி" விருதும், தென்கொரிய முனைவர் சரவணன் அவர்களுக்கு "தமிழ் வேந்தர்" விருதும், பத்திரிகையாளர் திரு.ஆவுடையப்பன் அவர்களுக்கு "கலைத் துறை நாயகன்" விருதும், மற்றும் இவ்வரலாற்று நிகழ்வை சாத்தியப்படுத்திய கற்றல் குழுமத்தின் தலைவர் முனைவர் ஸ்ரீ ரோகிணி அவர்களுக்கு "கல்வி தமிழ் மகள் விருதும்" வழங்கிக் கௌரவித்தனர்.

"

மாணவர் ஒருவர்
ஆசிரியர் ஒருவரின்
சிறந்த பிரதிபலிப்பு.

- லோரன்ஸ் பிரவுன்

கற்றல் கல்வி மேலாண்மை மையத்தின் ஆசிரியர்களைச் சிறப்புச் செய்யும் விதமாகத் தலைமை ஆசிரியர் திருமதி. அபிராமி, துணைத் தலைமை ஆசிரியர் திருமதி. கிருபா பிரியதர்ஷினி ஆகியோருக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது வழங்கியும், கற்றலின் பிற ஆசிரியர்களுக்குச் சிறந்த ஆசிரியர்கள் விருது வழங்கியும் கௌரவப்படுத்தினர்.

சிரிப்பையும் சிந்தனையை ஒரே நேரத்தில் சாத்தியமாக்கும் கலைஞர் ஆர். ஜே. அருண் அவர்கள் நிகழ்ச்சித் தொகுப்பாளராகத் தனது மொழிச்செய்யுள் திறத்தால் அனைவரையும் ஈர்த்தார்.

“இசையில் மயங்காத இதயம் எது” **என்பது போல் டி.ஜே நடராஜ் அவர்கள் இசையால் நிகழ்வை உற்சாகத் திருவிழாவாக மாற்றினார்.**

“நானிலம் போற்றும் நல்லோருக்கு நன்றி
சொல்வது நமது கடமை”

என்ற வகையில் திருமதி சுகந்த லெட்சுமி பிரதாப் அவர்கள் வருகை தந்த 500க்கும் மேற்பட்ட அமீரக மக்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்தபின், விழா இனிதே நிறைவடைந்தது.

“தென்றல் வரும் திசையில் தமிழின் மணம் வீசட்டும்; உலகெங்கும் தமிழ் ஒளியாய் பரவட்டும்.” **இவ்விழா, தமிழின் வளர்ச்சிக்கான பல படிகளைப் பதித்து பெற்றோரின் இதயங்களில் பெருமை, மாணவர்களின் முகங்களில் மகிழ்ச்சி, ஆசிரியர்களின் வரலாற்றில் மறக்க முடியாத ஓர் அற்புத நாள் ! என அமைந்தது.**

தமிழவேள் பி.டி.ராஜன் வாழ்வே வரலாறு

நீதிக்கட்சிப் பெருந்தலைவர்களில் ஒருவரும், திராவிட இயக்கத்தின் முன்னணிச் செயல்வீரரும் ஆட்சி நிர்வாகத்தில் முத்திரைகள் பதித்த சாதனையாளருமானவர் ‘பி.டி.ராஜன்’. அவருடைய வாழ்க்கை வரலாற்று நூல் தமிழ் மின்னூலகத்தில் அண்மையில் பதிவேற்றப்பெற்றுள்ளது.



டிஜிட்டல் உலகில் தமிழ் வாசிப்பு

பா.ராகவன்

ஆண்டுக்குத் தோராயமாகப் பதினைந்தாயிரம் தமிழ் நூல்கள் வெளியாகின்றன. இந்திய அளவில் இந்தி மொழிக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையில் புத்தகங்கள் வெளிவருவது தமிழில்தான். இதர மூன்று தென்னிந்திய மொழிகளில் வெளியாகும் நூல்களின் எண்ணிக்கை இதில் பாதியளவுகூட இல்லை. ஆனால், புத்தக வாசகர்கள் என்று பார்த்தால் தமிழில் அதிகபட்சம் இரண்டு லட்சம் பேரைச் சொல்ல முடியும். இதில் கவனிக்க வேண்டிய முக்கியமான அம்சம் ஒன்று உண்டு. இந்த இரண்டு லட்சம் என்ற எண்ணிக்கையே மெல்ல மெல்லப் பெருகி உருவாகி வந்ததுதான். இரண்டாயிரமாவது ஆண்டுக்கு முன்னர் தமிழ் வாசகர் உலகின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு மேல் கிடையாது.

புத்தகங்களின் எண்ணிக்கை இங்கே அதிகரிக்குமே தவிர, வாசகர் எண்ணிக்கை பெருகாது. காரணம், மிகத் தொடக்க காலம் முதலே நாம் ‘பேசிக் கேட்டு’ப் பழகியவர்கள். அரசியல், ஆன்மிகம் தொடங்கி அனைத்துத் துறைசார் தகவல்களையும் உரைகளின் மூலமாக, சொற்பொழிவுகளின் மூலமாகவே உள்வாங்கிப் பழகிய ஒரு மக்கள் கூட்டம், வாசிப்பு என்னும் செயலுக்குச் சுணங்குவது இயற்கை. இந்த வழக்கம் மாறத் தொடங்கியதே இரண்டாயிரமாவது ஆண்டுக்குப் பிறகு நிகழத் தொடங்கிய டிஜிட்டல் வாசிப்புப் பழக்கத்தினால்தான். தமிழில் இது அதிவேகம் கொள்ள மூல முதற்காரணம் யூனிகோடு என்னும் ஒருங்குறியின் வரவும் வீச்சும் என்பதில் சந்தேகமில்லை.



இணையம் இங்கே அறிமுகமான காலத்தில் தமிழில் ஒரு மின்னஞ்சல் எழுதினால் கூடவே நாம் பயன்படுத்திய எழுத்துருவை அதே அஞ்சலில் இணைத்து அனுப்பும் சூழ்நிலை இருந்தது. தமிழில் நெடுங்காலமாக அச்சிதழ் வெளியிட்டுக்கொண்டிருந்த நிறுவனங்கள் அனைத்தும் தமக்கென இணையதளம் தொடங்கியபோது ஆளுக்கொரு எழுத்துருவைப் பயன்படுத்தினார்கள். இந்த அவலம் அனைத்தையும் ஒருங்குறி துடைத்தழித்தது. தொழில்நுட்பம் அன்று சாகசம். நுட்பத்தின் பயனை மக்கள் மத்தியில் பரவலாகக் கொண்டுசேர்ப்பதே பெருஞ்செயல். அந்த வகையில், ஒருங்குறியின் வரவும் பயன்பாடும்தான் தமிழ் வாசிப்பை அடுத்த கட்டத்துக்கு அழைத்துச்சென்றது என்று உறுதியாகச் சொல்லலாம். திண்ணை, பதிவுகள், வார்ப்பு, அம்பலம், ஊடறு, ஆறாம்திணை, தமிழோவியம் போன்ற இணையப் பத்திரிகைகள் இதன் பிறகே பெருமளவு வாசக கவனம் பெறத் தொடங்கின.



ஆனால், இரண்டாயிரத்துப் பத்தாம் ஆண்டுக்குப் பிறகு இந்த இணைய இதழ் வாசிப்பில் ஒரு தேக்கம் உருவாகத் தொடங்கியது. சமூக ஊடகங்களின் வளர்ச்சி அதன் தலையாய காரணம். கலவையான ரசனை கொண்ட அனைவரும் இணைய இதழ்களைக் காத்திருந்து வாசித்தது போக, எதுவும் நிகழும் கணத்திலேயே என்கிற புதிய சித்தாந்தம் மேலெழுத் தொடங்கி, மிக விரைவில் அது அனைவரையும் கவர்ந்துகொண்டது. தவிர, எழுதுவோர்-வாசிப்போர் என்ற இரு தரப்பாக நிகழ்ந்த ஒரு செயல்பாடு மெல்ல மெல்லத் தனது முகத்தை மாற்றிக்கொண்டு எல்லோரும் எழுதலாம், எல்லோரும் படிக்கலாம் என்கிற ஜனநாயகமயத்தின் விளைவாக மிகப் பெரிய அளவில் பிரபலமடையத் தொடங்கியது. தமிழ்க் கணிமைச் சாதனைகளில் ஒருங்குறியைத் தொடக்கப் புள்ளியாகக் கொள்வோமானால், இந்தச் சமூக ஊடகப் பரவல் இன்னொரு புள்ளி. எழுதுவது என்னும் செயல்பாடு மிகச் சிலருக்கு மட்டுமே சாத்தியம், வாசிப்பது ஒன்றே வெகுமக்கள் செய்யக்கூடியது என்னும் கருத்தாக்கத்தையே தகர்த்தது இது. வாசகர்கள் தத்தமது ரசனை சார்ந்து இதழ்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்கவும் இக்காலகட்டம் வசதியளித்தது.

வாசிப்பும் எழுத்தும் ஜனநாயகமயமானதன் இன்னொரு பாய்ச்சல் வேறொரு புறம் சத்தமின்றி நடந்தது: மின்நூல்கள். மின்நூல்கள் வரத் தொடங்கியபோது பைரசியும் வளமாகவே வாழத் தொடங்கியது. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க ஒரே வழி, ஒவ்வொரு மின்நூல் வெளியீட்டாளரும் தத்தமது நூலை வாசிக்கத் தானே செயலியைச் சேர்த்துச் செய்துதருவதுதான்

என்று முடிவுசெய்தார்கள். அதாவது, குறிப்பிட்ட நிறுவனத்தின் செயலிக்குள் மட்டும்தான் அவர்கள் தரும் மின்நூலைப் படிக்க முடியும். பிரதி எடுக்க முடியாது, விநியோகிக்க முடியாது. இணையத்தில் குடிசைத் தொழில் செய்துகொண்டிருந்தோர் தொடங்கி, ஆப்பிள், கூகுள், அமேசான்வரை அனைத்துத் தரப்பினரும் இத்தகு முயற்சிகளை ஆரம்பித்தார்கள்.

ஆனால், அனைவரும் யோசிக்கத் தவறியது ஒன்று உண்டு. ஒரு வாசகர் தனது செல்போனில் எத்தனை வாசிப்புச் செயலிகளை வைத்திருக்க முடியும்? புத்தகங்கள் இடத்தை அடைத்துக்கொள்ளும்; மின்நூலில் அந்தச் சிரமம் கிடையாது என்று சொல்லிக்கொண்டு ஆரம்பித்து, மின்நூல் செயலிகளுக்கு போனில் இடம் கிடையாது என்று சொல்லும் அளவுக்கு இது போனது. ஆனால், தீர்ப்பளிக்கும் விஷயத்தில் பயனரை விஞ்ச யாருமில்லை. எல்லா விதங்களிலும் சௌகரியமான அமேசான் கிண்டில் மின்நூல்களை ஏற்றுக்கொண்டு மற்ற அனைத்தையுமே தமிழ் வாசகர்கள் நிராகரித்துவிட்டார்கள். ஆப்பிள், கூகுள் மின்நூல்களும் இதற்குத் தப்பவில்லை என்பதே இங்கு முக்கியம்.

ஒரு விஷயம். அமேசான் கிண்டில் புத்தகங்களுக்கும் திருட்டுப் பிரதிகள் தயாரிக்க முடிந்தது.



அப்படித் தயாரித்து, அவற்றை வெளியிடுவதற்கென்றே டெலிகிராமில் பல பிரத்தியேக சானல்கள் திறக்கப்பட்டன. அடையாளம் மறைத்த நபர்கள் திரை மறைவில் இருந்துகொண்டு இந்தத் திருட்டுப் பிரதிகளைத் தொடர்ந்து வெளியிட்டபோது கிண்டில் நிறுவனத்தாலும் அவர்களை ஒன்றும் செய்ய

முடியவில்லை. ஒன்றிரண்டு பிடிஎஃப் குழுக்களைப் புகார் அளித்து நீக்க முடிந்ததே தவிர, புதிது புதிதாக வேறு வேறு பெயர்களில் அவை மீண்டும் வருவதைத் தடுக்க முடியவில்லை. அனைத்தையும் மீறி அமேசான் கிண்டில் மின்நூல்கள் மட்டும் எப்படி வெற்றிகண்டன? இதற்கு மூன்று காரணங்களைச் சொல்லலாம். 1) பயன்பாட்டு எளிமை, 2) இயந்திரக் கற்றல் நுட்பம் மூலம் ஒரு வாசகர் ஒரு முறை தேர்வு செய்யும் புத்தகத்தைக் கொண்டு அவரது விருப்பம் அறிந்து அதற்கேற்பப் பரிந்துரைகள் செய்வது, 3) சக்தி மிக்க தேடுபொறி வசதி.

தமிழைப் பொறுத்தவரை வாசிப்பவர்கள் எக்காலத்திலும் சிறுபான்மையினரே. அந்தச் சிறுபான்மைச் சமூகம் தனது வாசிப்பை இன்றைக்கு இப்படி நவீனமாக்கிக்கொண்டிருக்கிறதே தவிர, வாசிக்காமல் இல்லை. முன் சொன்னதுதான். இரண்டாயிரத்துக்குப் பிறகுதான் தமிழில் வாசிப்போர் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இன்னும் இருபதாண்டுகளில் இது இன்னும் பல மடங்காகுமே தவிர குறையாது. ஆனால், எத்தனை ஆயிரம் பக்கங்களானாலும் அது ஒரு கைபேசிக்குள் அடங்கும் நுட்பத்தைத் தாங்கியதாக இருக்க வேண்டும். காலம் இதைத்தான் எதிர்பார்க்கிறது. நுட்பம் இதை நோக்கித்தான் நகர்ந்துகொண்டிருக்கிறது.

கணித்தமிழ்24 மாநாட்டின்போது வெளியான ‘கணிக்கோவை’யில் இடம்பெற்ற கட்டுரையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி.

நாடு போற்றும் 4 ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு

திராவிட மாடல் அரசு என நாடு பாராட்டும் தமிழ்நாடு அரசின் நான்காண்டுச் சாதனைகளை உள்ளடக்கிய அரிய தொகுப்பு நூல் இது. அரசு துறை தோறும் ஆற்றியுள்ள மக்கள் பணிகளைப் படித்துப் புரிந்துகொள்ள உதவும் நூல் இது. இந்நூல் தமிழ் மின்னுலகத்தில் வாசிக்கக் கிடைக்கிறது.



தமிழ் இணையக் கல்விக்கழகமும் நவீன தமிழாய்வின் மறுமலர்ச்சியும்

பொ.வேல்சாமி

1.தஞ்சையில் புகழ்பெற்ற வழக்கறிஞர், ஆங்கிலத்திலும் தமிழிலும் நிறைந்த புலமைபெற்ற கல்வியாளர், சைவ சித்தாந்தம், சைவத் திருமுறைகள் போன்றவற்றைப் பிறருக்குக் கற்பிப்பதில் சிறந்த ஆசான், அன்பும் பண்பும் நிறைந்தவர், எல்லோராலும் "டி.என்.ஆர்" என்று அன்புடன் அழைக்கப்பட்டவர் "சேக்கிழார் அடிப்பொடி" டி.என். இராமசந்திரன் ஐயா அவர்கள் ஆவார். இவருடைய அறிமுகம் இலங்கைத் தமிழ்ப் பேராசிரியர் சிவத்தம்பி வழியாக எனக்குக் கிடைத்தது. சைவ சித்தாந்தம் சார்ந்த பல விசயங்களில் எனக்குச் சிறந்த ஆசானாக இவரைப் பெற்றது நான் பெற்ற பேறு.

ஒரு நூற்றாண்டு கால தமிழ்நூல்களில் சிலவற்றைப் பற்றியும் சைவ சித்தாந்த நூல்கள் பலவற்றைப் பற்றியும் டி.என்.ஆரிடம் இருந்துதான் நான் அறிந்துகொண்டேன். அதே நேரத்தில் அவருக்கு ஒரு மனக்குறை இருந்தது. அது சைவ சித்தாந்த நூல்களின் முதல்பதிப்புகளைத் தமிழகம் எங்கும் தேடியும் பார்க்க முடியவில்லையே என்பதுதான்.

இத்தகைய சூழ்நிலையில் ஒருநாள் மதுரைநாயகம்பிள்ளை 1866 இல் முதல்முதலாகப் பதிப்பித்த சைவ சித்தாந்த நூல்களான "சிவஞானபோதம் மூலம்", "சிவஞானசித்தியார்", "சிவப்பிரகாசம்" "வினாவெண்பா" ஆகிய இவற்றைப் புதிதாகத் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் இணைத்திருந்தார்கள். இந்த இரண்டு நூல்களையும் உடனடியாகத் தரவிறக்கம் செய்துகொண்டேன். இந்தச் செய்தியை டி.என்.ஆரிடம் சொன்னேன். அவர் உடனே தனக்கும் அந்த நூல்களை அனுப்பிவைக்கும்படி கேட்டார். உடனடியாக அவருக்கு அனுப்பிவிட்டேன். மின்னூல் வடிவில் இருந்த இந்நூலைப் புத்தக வடிவில் மாற்றிக்கொண்டார். முதல்முதலாக அச்சில் வந்த அந்தப் புத்தகங்களைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டார். அதே நேரத்தில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இத்தகைய செயல்பாடுகளை மனம்திறந்து பாராட்டி மகிழ்ந்தார்.




ம ய ம்.
ற் ற ம் ப ல ம்.
சி வா சா ரி யா ர்
லர்ந்தருளிய
தியார்மூலமும்
திருவாய்மலர்ந்தருளிய
ா ச மூ ல மு ம்
பா மூலமும்.
வை
ரணி ம-ள-ஸ்ரீ
லிமுதலியாரவர்களும்,
ா - ஸ்ரீ- சந்நியாசி
யா ர வ ர் க ளு ம்,
டிக்கொண்டபடி
ர பு ர ம்.
வா ன்
பிள்ளையவர்களால்
பரிசோதித்து
பட்டணம்.
அச்சிட்டப்பட்டன.
ல ஐப்பசிமீ

"சேக்கிழார் அடிப்பொடி"
டி.என்.இராமசந்திரன்
தமிழ் இணையக்
கல்விக் கழகத்தின்
இத்தகைய
செயல்பாடுகளை
மனம்திறந்து
பாராட்டி மகிழ்ந்தார்.

— பொ.வேல்சாமி

“இந்த இரண்டு அறிஞர்களின் கருத்தின் அடிப்படையில், தமிழ் அறிஞர்கள் பலரும் கோமளபுரம் இராஜகோபாலபிள்ளையின் பதிப்புதான் "முதல்பதிப்பு" என்று நம்பி வந்தனர்.

நூற்றாண்டுவாரியாகத் தமிழ் இலக்கிய வரலாற்றுத் தொகுதிகளைச் சிறப்பாக எழுதியுள்ள அறிஞர் மு.அருணாசலம் அவர்களும், தொல்காப்பியத்திற்கு எழுதப்பட்டுள்ள உரையாசிரியர்கள் எல்லோருடைய உரைகளையும் தன்னுடைய விளக்கத்துடன் பதிப்பித்துத் தமிழ் அறிஞர்களிடையே புகழ்பெற்றிருந்த தொல்காப்பியப் பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி ஆகிய இவ்விருவரும் தொல்காப்பியத்திற்கு சேனாவரையர் எழுதிய உரை 1868 இல் முதல்முதலாக கோமளபுரம் இராஜகோபாலபிள்ளையால் வெளியிடப்பட்டது என்ற கருத்துடன் இருந்தனர். இத்தகைய செய்தியைப் பேராசிரியர் கு.சுந்தரமூர்த்தி தன்னுடைய தொல்காப்பியம் சேனாவரையர் உரைப்பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இந்த இரண்டு அறிஞர்களின் கருத்தின் அடிப்படையில், தமிழ் அறிஞர்கள் பலரும் கோமளபுரம் இராஜகோபாலபிள்ளையின் பதிப்புதான் “முதல்பதிப்பு” என்று நம்பிவந்தனர்.

ஆனால் தொல்காப்பியம் சேனாவரையர் உரை 1868 விபவ புரட்டாசி மாதத்தில் ஆறுமுகநாவலரால் பரிசோதிக்கப்பட்டுப் பதிப்புப் பேராசிரியர் சி.வை.தாமோதரம்பிள்ளையால் வெளியிடப்பட்ட நூலைத் தமிழ் இணையக் கல்விக்கழகம் தன்னுடைய இணையத்தில் வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில் தொல்காப்பிய சேனாவரையம் முதல்பதிப்பை வெளியிட்டவர்கள் ஆறுமுகநாவலரும் சி.வை.தா.வும் தான் என்பது உறுதியாகிறது. ஏனென்றால், கோமளபுரம் இராஜகோபாலப்பிள்ளையின் பதிப்பு அதே விபவ வருடம் வெளியிடப்பட்டிருந்தாலும் வெளியிட்டது கார்த்திகை மாதம் ஆகும். எனவே, இரண்டு மாதத்திற்குப் பின்னர் வந்த இந்த நூல் முதற்பதிப்பு ஆகாது என்பது வெளிப்படையானது.

III

“தமிழ்மொழி நவீன வளம்பெற்ற காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு.

தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பற்றி எழுதிய அறிஞர்கள் தமிழ் இலக்கிய வளத்தையும் இலக்கண வளத்தையும் இழந்து நின்ற காலமாக 19ஆம் நூற்றாண்டு காட்சியளிக்கிறது என்று எழுதிவந்தார்கள். எனவே, தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு இருண்டகாலம் போல் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சித்திரித்து வந்தனர். இப்படியான பார்வை கி.பி.2010 வரை அதாவது, சுமார் ஒரு நூற்றாண்டு காலம் அப்படியே நிலைத்து நின்றது. இத்தகைய கருத்துகள் அர்த்தமற்றவை. உண்மையான பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கும் இதற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்று “தமிழ் இணையக் கல்விக்கழகத்தின்” வழியாக வெளியிடப்பட்ட பல நூல்களின் வழியாக நாம் உணர்ந்துகொள்கிறோம். உண்மையில் அதுவரை காலமும் பழமையையே சுமந்துவந்த தமிழ் இலக்கியம், நவீனமயப்பட்ட காலம் இது. இலக்கிய இலக்கணச் சிந்தனைகளில் மட்டுமல்லாது அறிவியல், தொழில்நுட்பம் போன்றவற்றுடனும் நவீன வரலாற்றுச் சிந்தனைகளுடனும் தன்னை இணைத்துக்கொண்டு நவீனத்துவமாக மாறிய தமிழ் நூல்கள் நூற்றுக்கு மேற்பட்டவை இக்காலத்தில் வெளிவந்துள்ளன. பழந்தமிழ் நூல்களின் பதிப்பு வரலாறு, தமிழ் உரைநடையின் வளர்ச்சி, பள்ளி, கல்லூரிப் பாடநூல்களின் பெருக்கம், சட்டநூல்கள், தமிழ் தமிழ் - ஆங்கிலம், தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ், பிரெஞ்சு - தமிழ் என்று எண்ணற்ற அகராதிகளின் உருவாக்கம், தமிழ்மொழியிலேயே மருத்துவக் கல்வியைப் போதிக்கும் நூல்களின் உருவாக்கம், பல்வேறு வகையான கலைகளைச் சொல்லுகின்ற பிறமொழி நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு என்று தமிழ்மொழி நவீன வளம்பெற்ற காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு. இதனை உலகத்திற்குச் சொன்னது “தமிழ் இணையக் கல்விக்கழகத்தின்” வெளியீடுகள்தாம் என்பதை கல்வியாளர்கள் எவரும் மறுக்க முடியாது.

தமிழ் மொழி வளர்ச்சியில் இணையத்தின் பங்கு

மு. அனந்தகிருஷ்ணன்

தமிழ் இணைய வளர்ச்சியில் பங்குவகித்த முன்னோடி ஆளுமை மு.ஆனந்தகிருஷ்ணன். கான்பூர் இந்தியத் தொழிநுட்பக் கழகத்தில் இயக்குநராகவும், அண்ணா பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகவும் பணியாற்றியவர். இவர் தமிழ்நாடு அரசின் தகவல் தொழிநுட்ப ஆலோசகராகவும் பொறுப்புவகித்துள்ளார். கோயம்புத்தூரில் 2010 ஜீனில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டு மலரில் இடம்பெற்ற கட்டுரையின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதி இது.

1

1999இல் சென்னையில் இரண்டாம் இணையத் தமிழ் மாநாடு நடைபெற்றது. ஓரளவுக்குத் தமிழ் எழுத்துகளுக்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகளைத் தரப்படுத்த TAM, TAB என்ற இரு குறியீடுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. அதோடு கணினியில் பயன்படுத்தப்படும் விசைப்பலகையில் தமிழ் எழுத்துகளின் இடவரிசைகளை நிர்ணயிக்க வேண்டி Tamilnet99 என்ற விசைப்பலகையின் அமைப்பு உருவானது. இம்முடிவுகளுக்குத் தமிழக அரசின் ஆணைகளும் அளிக்கப்பட்டன.

2

முன்பெல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமே மடல்களில் பரிமாற்றம் நிகழ்ந்தது மாறி, தற்பொழுது தமிழிலேயே பரிமாற்றம் செய்துகொள்ள முடியும். இதற்கு முக்கியக் காரணமாகத் தமிழ் எழுத்துகள் யூனிகோடு (Unicode) குறியீட்டு முறையில் பயன்படுத்தப்படுவதால் அனைவரும் தங்கு தடையின்றி மடல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ள முடிகிறது.

3

சென்னையில் 1999இல் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டின் விளைவாக, கலைஞர் அவர்களின் அறிவுரையின் அடிப்படையில் உருவாகிய தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நூற்றுக்கணக்கான நூல்களையும் தமிழ்ப் பாடங்களையும் உலகெங்கும் உள்ள தமிழர்கள் இலவசமாகப் பெற வழிவகுத்துள்ளது.

4

தமிழ் வளர்ச்சிக்கென மற்றுமோர் இன்றியமையாத தேவை கணினி மொழியியலின் அடிப்படையில் முதுநிலைப் பட்டப்படிப்புகளும் ஆய்வுகளும் மேற்கொள்ள வேண்டும். தற்போது மொழியியல் பட்டப்படிப்பு மற்ற இந்திய மொழிகளைக் காட்டிலும் தமிழில் குறைவாகவே உள்ளது. இந்நிலை மாறி தமிழ்நாட்டில் கணிதம், புள்ளியியல் மற்றும் கணினித் தொழில்நுட்பத்தோடு கூடிய தமிழ் மொழி இயல் மையங்கள் இரண்டு பல்கலைக்கழகங்களில் செயல்பட வேண்டும்.



கணினி வளர்ச்சி வரலாற்றில் கடந்த முப்பது ஆண்டுகளில் அனைவருக்கும் எளிதாகக் கிட்டும் வாய்ப்பு உருவாகி, கணினியின் பயன்பாடுகள் வேகமாக வளர்ந்தபோது ஆரம்ப கால கட்டத்தில், கணினியின் சேவைகளுக்கு ஆங்கில மொழி மட்டுமே தேவை என்ற கருத்து வலிவுற்றது. இத்தகைய மனப்பாங்கு தமிழறிஞர்களிடையே வேரூன்றினால், தமிழ் மொழி கற்கும் ஆர்வம் பின்னடைவு பெறும் என்ற நிலையில், உலகத்தின் பல்வேறு இடங்களில் இருந்த தமிழ் அறிந்த கணினி வல்லுநர்கள் கணினியில் தமிழ் மொழி எளிதாக முழுமையாகச் செயல்பட வேண்டிய கட்டாயத்தை உணர்ந்து அதற்கேற்ற பல முயற்சிகளை முப்பது ஆண்டுகளாக மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரம்பத்தில் இத்தகைய முயற்சிகளைத் தொடங்கியவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் மிகக் குறைவு. பெரும்பாலும் இவர்கள் கனடா, வட அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, சிங்கப்பூர், மலேசியா, ஸ்ரீலங்கா, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்த ஆர்வலர்கள். இவர்களில் பலர் கணினித் துறை அல்லாத மற்ற அறிவியல் தொழில்நுட்பத் துறையில் ஈடுபட்டிருந்தாலும் கணினியின் பயன்பாட்டை நன்கு அறிந்தவர்கள். இவர்கள் 1980களில் மேற்கொண்ட முயற்சிகள் பெரும்பாலும் தமிழ் எழுத்துகளைக் கணினிக்கு ஏற்றவாறு உருவாக்குவது, அவற்றைக் கணினியில் பயன்படுத்துவது, அதற்கேற்ற மென்பொருள்களைத் தயாரிப்பது தொடர்பான ஆய்வுகளாகும். இவை யாவும் தனித்தனி முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்டதால், ஒருவருடைய படைப்பை மற்றவர்கள் பயன்படுத்துவது கடினமாக இருந்ததால் இவற்றைத் தரப்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது.

இந்தக் காலகட்டத்தில் இணையத்தின் செயல்பாடுகள் ஆரம்பமாயின. 1997இல் சிங்கப்பூரில் பேராசிரியர் நா.கோவிந்தசாமியின் முயற்சியால் ஒரு சிறிய ‘தமிழ் கணிப்பொறி மற்றும்



இணைய ஆர்வலர்களின் மாநாடு’ நடைபெற்றது. 1999இல் சென்னையில் இரண்டாம் இணையத் தமிழ் மாநாடு நடைபெற்றது. ஓரளவுக்குத் தமிழ் எழுத்துகளுக்குப் பயன்படுத்தப்படும் குறியீடுகளைத் தரப்படுத்த TAM, TAB என்ற இரு குறியீடுகள் ஒப்புக்கொள்ளப்பட்டன. அதோடு கணினியில் பயன்படுத்தப்படும் விசைப்பலகையில் தமிழ் எழுத்துகளின் இடவரிசைகளை நிர்ணயிக்க வேண்டி Tamilnet99 என்ற விசைப்பலகையின் அமைப்பு உருவானது. இம்முடிவுகளுக்குத் தமிழக அரசின் ஆணைகளும் அளிக்கப்பட்டன. இருப்பினும், இதுவரை இருந்த எழுத்துக் குறியீட்டு முறை மற்றும் விசைப் பலகை ஓரளவுக்குப் பரவலாகத் தமிழ்நாட்டிலும் வெளிநாட்டிலும் பயன்படுத்தப்பட்டபோதும், முழுமையாக எவரும் செயல்படுத்தவில்லை.

தமிழகத்தில் நடந்த இணைய மாநாட்டைத் தொடர்ந்து இணையத்தில் தமிழ் மொழியின் வளர்ச்சியைக் குறித்த பல்வேறு முயற்சிகளுக்கு அடிகோலும் வகையில் உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (உத்தமம்) உருவாக்கப்பட்டது. இதனுடைய முக்கியக் குறிக்கோள் கணினித் தமிழிலும் இணையத் தமிழிலும் ஈடுபட்டுள்ள நிறுவனங்களையும் ஆர்வலர்களையும் ஒருங்கிணைப்பதுதான். அதோடு கணினித் தமிழ் செயல்பாடுகளுக்கான விதிமுறைகளை வகுப்பது, தொடர்ந்து தமிழ் இணைய மாநாடுகளை உலகின் பல்வேறு பகுதிகளில் நடத்தித் தமிழ் ஆர்வலர்களின் கருத்தைப் பெறுவது போன்றவை மற்ற குறிக்கோள்களாகும்.

சென்ற 10 ஆண்டுகளில் இணையத் தமிழ் வளர்ச்சி எதிர்பாராத அளவிற்கு மிக வேகமாகவும் பயனுள்ளதாகவும் நிகழ்ந்துள்ளது. அவற்றில் குறிப்பிடத்தக்க பின்வரும் வளர்ச்சிகளைக் காணலாம்.

1 மின்அஞ்சல் மூலம் தமிழைப் பயன்படுத்தி மடல்கள் அனுப்புவது பெருகி வருகிறது. மின்அஞ்சல் சேவைகள் இலவசமாகக் கிடைக்கின்றன. முன்பெல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமே மடல்களில் பரிமாற்றம் நிகழ்ந்தது மாறி, தற்பொழுது தமிழிலேயே பரிமாற்றம் செய்துகொள்ள முடியும். இதற்கு முக்கியக் காரணமாகத் தமிழ் எழுத்துகள் யூனிகோடு (Unicode) குறியீட்டு முறையில் பயன்படுத்தப்படுவதால் அனைவரும் தங்கு தடையின்றி மடல்களைப் பரிமாற்றம் செய்துகொள்ள முடிகிறது.

2 யூனிகோடு முறையைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான இணைய இதழ்கள் உலகின் பல்வேறு பாகங்களில் உருவாக்கப்பட்டு எளிதாக அனைவருக்கும் கிடைக்கின்றன. இவற்றில் நாளிதழ், வார இதழ், மாத இதழ் மற்றும் பல வகையான தனி இதழ்கள் இணையத்தில் கிடைக்கின்றன. தமிழ்நாட்டிலிருந்து தினமலர், தினமணி, தினகரன், குமுதம், ஆனந்தவிகடன் போன்றவை அடங்கும். யூனிகோடு பயன்படுத்தாத இதழ்களை இணையத்தில் படிப்பதற்கு அதற்கெனத் தனியாக எழுத்துருக்கள் உள்ளிறக்கம் (Download) செய்ய வேண்டும்.

3 நூற்றுக்கணக்கான தமிழ் நூல்கள் இணையத்தின் மூலமாகக் கிடைக்கப் பெறுகின்றன. சென்னையில் 1999இல் நடைபெற்ற தமிழ் இணைய மாநாட்டின் விளைவாக, கலைஞர் அவர்களின் அறிவுரையின் அடிப்படையில் உருவாகிய தமிழ் இணையப் பல்கலைக்கழகம் நூற்றுக்கணக்கான நூல்களையும் தமிழ்ப் பாடங்களையும் உலகெங்கும் உள்ள தமிழர்கள் இலவசமாகப் பெற வழிவகுத்துள்ளது. இவற்றையும் யூனிகோடு முறையில் மாற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று ஓலைச்சுவடிகளையும் கல்வெட்டுகளையும் பழைய கையெழுத்துப் பிரதிகளையும் மிக அரிதான அச்சுப் பிரதிகளில் இருக்கும் தமிழ் நூல்களையும் மின்னுருவாக்கி இணையத்தில் பலரும் பெறுவதற்குப் பல்வேறு இணைய தளங்கள் உருவாகி உள்ளன.

4 தற்பொழுது வேகமாகப் பரவிவரும் தமிழ் வலைப்பூக்கள் பல்வேறு தகவல்களையும், நூல்களையும், ஒலி ஒளி கோப்புகளையும், ஓவியங்கள், படங்கள் போன்றவற்றையும் குறிப்பிட்ட பதிவாளர்கள் பரிமாற்றம் செய்துகொள்ளப் பயன்படுகின்றன.

5 தமிழில் விக்கிப்பீடியா மிக வேகமாக வளர்ந்து வரும் கலைக்களஞ்சியமாகும். ஆங்கில மொழியில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்தக் கலைக்களஞ்சியத் திட்டம் உலக அளவில் பல்வேறு மொழிகளில் வேகமாக விரிவடைந்து வருகிறது. தமிழ் மொழி வளர்ச்சிக்கென மற்றுமோர் இன்றியமையாத தேவை கணினி மொழியியலின் அடிப்படையில் முதுநிலைப் பட்டப்படிப்புகளும் ஆய்வுகளும் மேற்கொள்ள வேண்டும். தற்போது மொழியியல் பட்டப்படிப்பு மற்ற இந்திய மொழிகளைக் காட்டிலும் தமிழில் குறைவாகவே உள்ளது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் வளர்ந்து வந்த இத்துறை தற்போது நலிவடையும் நிலையில் உள்ளது. இந்நிலை மாறி தமிழ்நாட்டில் கணிதம், புள்ளியியல் மற்றும் கணினித் தொழில்நுட்பத்தோடு கூடிய தமிழ் மொழி இயல் மையங்கள் இரண்டு பல்கலைக்கழகங்களில் செயல்பட வேண்டும். இந்த மையங்களில் தமிழ் தரவுத் தொகுப்பைக் கணினி வழியில் உருவாக்க வேண்டும். அரசுரிமையாக்கப்பட்ட அனைத்து நூல்களும் இணையதளத்தில் யூனிகோடில் இடம்பெற கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி அளித்துப் பயன்படுத்த வேண்டும்.

இன்றைய முக்கியத் தேவை: சொற்பிழை திருத்தி, இலக்கணப்பிழை திருத்தி, எழுத்து பேச்சு மாற்றி, பேச்சு எழுத்து மாற்றி போன்ற மொழிச் சாதனங்களுக்குத் தேவையான மென்பொருள்களை உருவாக்கி அனைவரும் பயன்பெற வழிவகுக்க வேண்டும்.

தமிழ் மின் நிகண்டு

(Visual Thesaurus for Tamil)

அறிமுகம்

கணினியில் தமிழ்மொழியின் பயன்பாடும் பங்களிப்பும் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. மொழியின் பரந்த சொற்களை மொழி கற்பவர்களுக்குப் பொருள் அடிப்படையில் தொகுத்து, ஒரு சொல் பல பொருள்களைக் கொண்டிருப்பின், அந்தப் பொருள்களையும் அறிந்துகொள்ளத் தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழ் மின் நிகண்டினை உருவாக்கியுள்ளது.

தமிழ் மின் நிகண்டு

தமிழ் மின் நிகண்டு அகராதி போல் அல்லாது தொடர்புடைய ஓரினப்பொருளைச் சுட்டுவதற்கு வெவ்வேறான உணர்பொருள் (Connotations) சொற்களால் உணர்த்தும். இம்மின் நிகண்டு மூலம் ஒரு சொல்லுக்கு எத்தனை பொருள்கள் உள்ளன என்பதையும், ஒரு பொருளுக்கு எத்தனை சொற்கள் உள்ளன என்பதையும் கண்டறியலாம்.



தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கியுள்ள இம்மின் நிகண்டு தற்காலத் தமிழ் மொழிக்கு ஏற்றவாறு உருவாக்கப்பட்டுள்ளது. 25,000 தலைச்சொற்களும் அச்சொற்களுக்கு 65,000 உணர்பொருள் கொண்ட சொற்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சொற்கள் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதி, தமிழ் - தமிழ் அகர முதலி, பிற அகராதிகள் மற்றும் பல நிகண்டுகளில் இருந்து கண்டறிந்து கொடுக்கப்பட்டுள்ளன. இம்மின் நிகண்டை அனைவரும் எளிதாகப் பயன்படுத்தும் வகையில் தமிழ் இணையக் கல்விக்கழகம் கட்டற்ற மென்பொருளாகவும் கைப்பேசி செயலியாகவும் வெளியிட்டுள்ளது.

செயல்முறை

ஒரு தலைச் சொல்லைச் சொடுக்கும் பொழுது அச்சொல்லுக்கு ஒத்த பொருளுடைய பல்வேறு சொற்கள் தோன்றும். அவ்வாறு தோன்றும் உணர் பொருளின் முன்னுள்ள வளையம் முழுவதும் வண்ணம் உள்ள சொல்லைச் சொடுக்கினால் அச்சொல்லின் ஒத்த பொருளுடைய சொற்கள் தோன்றும். இவ்வாறு அடுத்தடுத்து 4 நிலைகளில் அவ்வுணர்ப் பொருள்கள் தோன்றும்.

சொல்லின் முன் உள்ள வளையம் வெற்று வளையமாக இருப்பின் அச்சொல்லுக்கான ஒத்த தன்மையுள்ள சொற்கள் இல்லை அல்லது இன்னும் சேர்க்கப்படவில்லை என்று கொள்ளலாம். சொல்லின் முன்னுள்ள வளையம் முழுவதும் வண்ணமாக காணப்படின் அச்சொல்லுக்கான ஒத்த தன்மையுள்ள சொற்கள் சேர்க்கப்பட்டுள்ளன என்று கொள்ளலாம்.



சான்றாக ‘காற்று’ என்ற சொல்லைக் கொடுக்கப்பட்டுள்ள அகர வரிசை அட்டவணையிலிருந்து தேடினால் அச்சொல்லோடு தொடர்புடைய பல ஒத்த சொற்கள் பல்வேறு வண்ணங்களில் திரையில் தோன்றும்.

ஒவ்வொரு சொல்லுக்கும் பல அர்த்தங்கள் உள்ளன ஒவ்வொரு வண்ணமும் ஒத்தத தன்மையுள்ள சொற்களை உணர்த்தும். ஒவ்வொரு சொல்லுக்கும் அவற்றுள் ஒத்த தன்மையுள்ள சொற்கள் தோன்றும். அது போன்றே மற்ற எல்லாச் சொற்களும் ஒரு பொதுமையின் அடிப்படையில் ஒன்றுசேர்க்கப்பட்டு ஒரு வண்ணத்தினுள் அடக்கப்பட்டுள்ளன.

சான்றாக ‘காற்று’ என்ற சொல்லுக்கு ‘வாடை’ ‘தென்றல்’ ‘கொண்டல்’ ‘கோடை’ என்னும் நான்கு சொற்கள் ஒரே வண்ணத்தில் தோன்றும். இந்நான்கு சொற்களும் நான்கு திசைகளிலிருந்து வீசும் காற்றைக் குறிப்பதால் ஒரே வண்ணத்திற்குள் அடக்கப்பட்டுள்ளன.


முகப்பு
அகரவரிசை
தேடும் சொல் :
தேடு
காற்று
கூதிர்
வாடை
தென்றல்
கொண்டல்
கோடை
கால்
உயிர்
வளி
மாருதம்
சலனம்
ஆவி
உலவை
மருத்து
பிரபஞ்சனன்
அனிலம்
அரி
பவனம்
மால்
பனிக்காற்று
குளிர்
குளிர்காலம்


பக் கல்விக்கழகம்
ின் நிகண்டு
பனிக்காற்று
குளிர்ச்சி
கடுங்குளிர்
தணுப்பு
நடுக்கம்
விரைப்பு
குளிர்ச்சியுறுதல்
உடம்புசில்லிடுதல்
பனிக்காற்றுஉறைத்தல்
தங்குதல்
முகங்கவிதல்
ஆறுதலடைதல்
கவண்
மழு
அரிவாள்
நண்டு
கடகராசி
ஆடிமாதம்
தாங்கு
நடுக்கம்
தண்
ஏற்றுக்கொள்
பொறுத்துக்கொள்
ஆதரி
ஏந்திநில்
ஆதாரங்கொடு
சும
நிறுத்து
பிடித்துக்கொள்
தள்ளு
தடு
தடுத்துநிறுத்து
தடுத்தாளு
பிடித்துக்கொள்
அணி
மனதில்கொள்



இவ்வாறு அனைத்து அர்த்தங்களும் ஒன்றாகத் தொகுக்கப்பட்டு, அதற்கேற்ப வண்ணம் தீட்டப்பட்டுள்ளன, இது தமிழ் மொழியைக் கற்பவர்களுக்கு எளிதாகவும் ஆர்வமூட்டுவதாகவும் இருக்கும்.

சொற்களைப் பாகுபடுத்தி பல வண்ணங்களில் காட்டும்போது பயன்படுத்துபவர்களுக்கு எளிமையாக இருப்பதுடன் இடத்திற்கு ஏற்பச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்த முடியும்.

முடிவுரை

தமிழ் மொழி கற்பவர்களுக்கு இம்மின் நிகண்டு சொற்களின் பொருளை அறியவும், மொழித்திறனை வளர்க்கவும் உதவுகிறது. சங்க இலக்கியம், பக்தி இலக்கியம் போன்ற பழந்தமிழ் நூல்களில் உள்ள சொற்களின் பொருளை அறிய நிகண்டுகள் உதவுகின்றன. இப்புதிய நிகண்டு இயற்கைமொழி ஆய்வு மற்றும் செயற்கை நுண்ணறிவு போன்ற மொழித் தொழில்நுட்பச் செயல்பாடுகளுக்கு உதவுகிறது.

தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் https://www.tamilvu.org/tva_vt_os/ என்ற இணைப்பின் மூலமாக இம்மென்பொருளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

தமிழ் இணையக் கல்விக்கழகம்

TAMIL VIRTUAL ACADEMY

https://www.tamilvu.org/

https://www.tamildigitallibrary.in/